# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூஎ. } யாழ்ப்பாணம்:—குரோதன௵ கார்த்திகைமீ அ; (1925 நவம்பர் 23) திங்கட்கிழமை. { இலக்கம்—சO


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோ ரோங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை,முகப்புக்கொடி,காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு,வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வே. சென்னிசெட்டி ஸன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

ESTABLISHED, 1909.

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (South Arcot Dt; India.)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

கண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றுப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூர்வமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

☞ இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்விலாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.

[illegible] பித்த சிலேத்ம பிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் [illegible], [illegible]டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், நித்திராபங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினால் வி-பி. செலவு இனுமாயனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை ஊர்களுக்கு நிச்சயமாய் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின சத்தால் செய்யப்படவில்லை யென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றுவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றுவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினாலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ. 1000 இனுமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனுமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினால் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—
Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு. ஜில்லா.

(Y. 38.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் அப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

ஈா. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39.)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகிறது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ருபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

## அறைக்கீரைவிதைத் தைலம்.



பித்த மேகசீரானது சிரசுக்கேற அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்தவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, காப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த கோட்டையில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் யோக்காய்த்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும் 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கவும்.'

ஐம்பகத்தம்மாள்,
8 நம். பிராமன் ரோட்,
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

## ஒற்றுமை.

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனும். வருடசந்தா உள்நாடு ரூபா1. வெளிநாடு ரூபா 1¼. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். 'ஒற்றுமை' ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(H. 43.)

## சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

## ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-ல் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனும். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.

(Y. 45.)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சீ. அ. வேணுகோபால்செட்டியார் அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: குரோதன ௵ கார்த்திகை ௴ ௮-ம் ௳ திங்கட்கிழமை.

## யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

### போனவை போகட்டும் இனியேனுந் திருந்துக.

யாழ்ப்பாணம் பட்டினபரிபாலன சங்கத்திற்குரிய வட்டாரங்களின் பிரதிநிதித் தேர்வு சென்ற சனிக்கிழமை (21-11-25) நிகழ்ந்தது. முதலாம் வட்டாரத்திற்கு யாரும் பிரதிநிதிகளின்றி ஸ்ரீ இராசரத்தினம் நல்லையா அவர்களே முன்போலப் பிரதிநிதியாக விருக்கின்றனர். இரண்டாம் வட்டாரப் பிரதிநிதியாக வருதற்கு, முந்தியிருந்த பிரதிநிதியாகிய மிஸ்ரர் J. A. J. திசைவீரசிங்கமவர்களும், அரசாங்க உத்தியோகம் பார்த்து இப்பொழுது உபகார வேதனம் பெறுபவராகிய மிஸ்ரர் P. மோசஸ் அவர்களும் முற்பட்டு நின்றனர். இதில் மிஸ்ரர் மோசஸ் அவர்களே வட்டார வாசிகளுட் கூடிய தொகையினருடைய சம்மதத்தைப் பெற்றுத் தேரிதல் செய்யப்பட்டார். மூன்றும் வட்டாரத்திற்கு ஸ்ரீ R. சுப்பிரமணியமவர்களே யாரும் எதிரிகளின்றிப் பழையபடி பிரதிநிதியானார். நான்காம் வட்டாரத்திற்கு பழையபடி கௌரவ ஸ்ரீ ஆ. கககரத்தினமவர்களே தேரிவுசெய்யப்பட்டனர். ஐந்தாம் வட்டாரத்திற்குப் பிரதிநிதியாக வருதற்கு பழைய அங்கத்தவராகிய ஸ்ரீ க. சோமசுந்தரமவர்களும் ஸ்ரீ C. நவரத்தினமவர்களும் தனித்தனி முற்பட்டு நின்றனர். ஈற்றில், ஸ்ரீ சோமசுந்தரமவர்களே ஜயமடைந்தனர்.

ஆறும் வட்டாரத்திற்கு ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமியவர்களும் ஸ்ரீ முத்தையா ஆசைப்பிள்ளை யவர்களும் பிரதிநிதியாக வருதற்குத் தனித்தனி முற்பட்டு நின்றனர். இவர்களுள் பழைய அங்கத்தவராகிய ஸ்ரீ குமாரசுவாமியவர்களே பின்னருந் தேரிவு செய்யப்பட்டனர். ஏழாம் வட்டாரத்திற்குப் பழைய அங்கத்தவராகிய ஸ்ரீ இ. சிவகுருநாதரவர்களே எதிரிடையின்றிப் பின்னருந் தேரிவுசெய்யப்பட்டுள்ளனர். எட்டாம் வட்டாரத்திற்குப் பழைய அங்கத்தவராகிய மிஸ்ரர் அப்துலகாதறுவும், பிறக்டர் அபூபக்கருந் தனித்தனி முற்பட்டு நின்றனர். இவ்விருவருள்ளும் மிஸ்ரர் அப்துல்காதறு அவர்களே தேரிவுசெய்யப்பட்டனர். எனவே இரண்டாம் வட்டாரத்துப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் மோசஸ் அவர்களைத் தவிர ஏனைய அங்கத்தவர்களேல்லாரும் பழையவர்களே யாவர். இவ்வங்கத்தவர்களும் அரசினரால் நியமனம்பெற்ற அங்கத்தவர்களும் சென்ற மூன்றுவருட அனுபவத்திலே இச்சங்கத்தினிடத்துள்ள குறை முறைகளையும் சரி பிழைகளையும் கண்டிருப்பர்.

மேற்படி சங்கத்தார் பழைய முறைகளிற் பிழையானவைகளையெல்லாம் கைவிடுத்து இனியேனும் பட்டினவாசிகளின் தாரித்திரிய நிலைமையையும் நாட்டின் இயல்பையும் உணர்ந்து அதற்குத்தக நடந்துகோள்ளுதல்வேண்டும். பட்டின வாசிகளும் போனவேல்லாம் போகட்டுமென்ற எண்ணமுடையவர்களாய், பட்டின பரிபாலன சங்கத்திற்குத் துணையாக நின்று கருமம்பார்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் பட்டினவாசிகட்கும் சங்கத்திற்குமிடையே பரஸ்பரம் நம்பிக்கையுண்டாகும். சங்கத்தார் தாங்கள் பட்டினவாசிகளின் பிரதிநிதிகளேன்ற எண்ணத்தை மனத்தில் எந்நாளும் வைத்துக் கோள்ளுதல்வேண்டும்.

## புகைரதப் பகுதியாரின் 1924-ம் வருட அறிக்கைப் பத்திரம்.

இலங்கைப் புகைரதப்பகுதியாருடைய 1924-ம் வருட அறிக்கைப் பத்திரம் வெளிவந்திருக்கிறது. கணக்கு முடிக்குங் காலவெல்லையாகிய 1924-ம் வருடம் செப்டெம்பர் மாதம் முப்பதாந் திகதிவரை அதற்கு முந்திய ஒருவருட காலத்தில் புகைரதப்பகுதியாருக்குக் கிடைத்த வருவாய் 24,858,921 ரூபா. அதற்கு முந்திய வருடத்தைக்காட்டிலும் சென்ற வருடம் 2,493,393 ரூபா அதிகமாகும். கிரயமின்றிப் புகைரத மார்க்கமாகக் கொண்டுபோகப்பட்ட நெல் அரிசி என்னு மிவற்றிற்கு மதிப்பிடப்பட்டபணம்211,082 ரூ. அரசாங்க உத்தியோகத்தர் தத்தம் ஸ்தானத் தலைவர்களுடைய அநுமதிப்பத்திரம் பெற்றுச் சென்ற கணக்கால் மதிப்பிடப்பட்டபணம் 2,118,142 ரூபா. இவ்விரு தொகையுஞ் சேர்ந்து சென்ற வருட மொத்த வருவாய் 27,188,145 ரூபாவாகும்.

"பார்ஸல்கள்" என்றமுறையில் 1923-ம் வருடத்தைக்காட்டிலும் 1924-ம் வருடத்தில் 59,289 'பார்ஸல்' அதிகமாக அனுப்பப்பட்டன. இத்தொகை தலைமன்னார் இருப்புப்பாதை வழியாக அனுப்பப்பட்ட மீன் "பார்ஸல்"களாலும் கொழும்புக் கோட்டைப் புகைரத ஸ்தானத்திலிருந்து வெவ்வேறிடங்களுக்கு அனுப்பப்பட்ட சாதாரண "பார்ஜல்" களாலுமே பெரும்பான்மையும் அதிகரித்தது. கரையோர இருப்புப்பாதை வழியாக இவ்வருடம் அனுப்பப்பட்ட மீன் "பார்ஸல்" களின் தொகை சிறிதே குறைந்தது. ஆயினும் மலைநாட்டு இருப்புப்பாதை வழியாக அனுப்பப்பட்ட காய்கறிப்"பார்ஸல்"களின் தொகை அதற்கு முந்திய வருடத்திலும் அதிகரித்தது.

1923-ம் வருடத்தில் 1,023,291 அந்தர் நிறையுள்ள பொருள்கள் அனுப்பப்பட்டன. 1924-ம் வருடத்தில் 1,151,915 அந்தர் நிறையுள்ள பொருள்கள் அனுப்பப்பட்டன. இவற்றுள் சில்லறைப் பொருள்களே அதிகமாகும். அவை 35,733 அந்தர். தென்னைப் பிரயோசனம் 21,035 அந்தர். பசளை 20,118 அந்தர். அரிசி 15,529 அந்தர். தேயிலை 12,832 அந்தர். கொப்பறு 7,325 அந்தர். தேயிலை றப்பர் பெட்டிகள் 6,558 அந்தர். வேறு பொருள்கள் 8,460 அந்தர் றப்பர் முந்திய வருடத்திலும் 444 அந்தர் குறைந்தது. மின்னரம் 682 அந்தர் குறைந்தது. முந்திவருடத்தைக்காட்டிலும் 4,607 ஆடுமாடுகள் 1924-ம் வருடத்திற் கொண்டு போகப்பட்டது.

புகைரதமார்க்கமாகக் கொண்டுபோகப்படும் "பார்ஷல்" களின் கிரயவிகிதம் பிரயாணிகளின் கிரயவிகிதம் முதலாயவை இப்பொழுது புகைரதப்பகுதி ஆலோசனைச் சபையாருடைய யோசனையிலிருக்கின்றன. அவைகளைப்பற்றிய அறிக்கை விரைவில் வெளிவரும் அதில் மோட்டர்பஸ் கட்சியினுல் நேர்ந்தபெறுபேற்றைப்பற்றியும் முதலாம் இரண்டாம் வகுப்புப்பிரயாணிகளின் தொகை குறைந்தமையைப்பற்றியும் விபரிக்கப்படும்.

"பெற்றோல்" என்னும் திராவகத்தால் இயக்கப்பட்டு இருப்புப்பாதைமேல் [illegible]டும் வண்டிப்போக்குவரவு இப்பொழுது [illegible] கொழும்புக்கும் [illegible]க்குமிடை[illegible] நடைபெறுகின்றது. அது அதிக சித்தியடைகின்றது; வருவாயும் அதிகம். கரையோர இருப்புப்பாதைமீது காலிக்கும் மாத்துறைக்குமிடையில் நீராவியினுல் இயக்கப்படும் மோட்டர்வண்டிப் போக்குவரவும் அதிவிரைவில் ஆரம்பிக்கப்படும். இத்தவிதமான முறைகளைக் கைக்கொண்டால் சமீபித்த இடங்களிலுள்ளவர்களுக்கு அதிக வசதியாகுமென்றும், அதனுற புகைரதப் பகுதியாருக்குத் தொழிலும் வருவாயும் அதிகப்படுமென்றும் புகைரதப்பகுதித் தலைவர் அபிப்பிராயப்படுகின்றனர்.

1924-ம் வருடத்தில் புகைரதப் பகுதியாரின் செலவு விபரம்:— வேதனவிஷயமாக 8,716,993 ரூபாவும் மற்றும் செலவு 7,946,818 ரூபாவுமாக 16,663,811 ரூபாவாகும். இத்தொகை முந்தியவருடத்தைக்காட்டிலும் 1,410,801 அதிகமாகும். அகமாக உத்தியோகத்தரை நியமித்தமையும் அதிகசேதமுற்ற பலபாகங்களைத் திருத்தியமையும் பிறவுமே இதற்குக்காரணங்களாகும். அன்றியும் உபகாரவேதனத்துக்காகவும் சிலகாலம் கடமைபார்த்து நீங்குவோருக்குக் கொடுக்கும் நன்கொடைக்காகவும் 506,000 ரூபா செலவாயது புதியவேலைகள் திருத்தங்கள்முதலானவற்றிற்காகவும் 1,549, 311 ரூபா செலவிடப்பட்டது. இத்தொகையில் 444,256 ரூபா புகைரதவருவாய்க்கணக்கிற் சேர்க்கப்பட்டது. மிகுதி 1, 105,055 ரூபா புகைரதப்பகுதிமுதற்பணத்துடன்சேர்க்கப்பட்டது அதிகமான இடவசதிதிருத்தம்முதலாவற்றின்பொருட்டுச் செலவு செய்யப்பட்ட பணம் உட்பட மொத்தம் முதற்பொருப்பு160,369,876 ரூபா இத்தொகையும் சென்ற வருடத்தைக்காட்டிலும் அதிகம்.

இலங்கையிலுள்ள இருப்புப் பாதையின் நீளம் 742 மைல், இதில் 625 மைல் அகன்ற பாதை; 117 மைல் ஒடுங்கிய பாதை. அவ்வருடத்தில் புகைரதங்கள் 3,161,345 மைல் ஓடியிருக்கின்றன. முந்திய வருடத்தைக்காட்டிலும் 411,404 மைல் அதிகம். புகைரதப்பகுதித்தொழில் விருத்தியைப்பற்றிய விஷயம் புகைரதப்பகுதி ஆலோசனைச் சங்கத்தாருடனும் தனதிகாரியுடனும் நீர்க்காலோசனை செய்யப் பட்டது. அவ்விஷயத்தைப் பற்றி அரசினர் இப்பொழுது யோசனை செய்கின்றனர். புகைரதப்பகுதிக்குரிய "கோட்" புத்தகம் இப்பொழுது வரையப்பட்டிருக்கிறது; பிரயாணிகளின்போக்கு வரவுக்குரிய கடமைகளைப் புரியும்பகுதியாருக்கு வேண்டிய புதியமுறைகள் சட்டநிரூபணசபையாராலும் அரசினராலும் அங்கீகாரம் பெற்றன.

வடபாக வீதியில் சிறிய மதகுகளைப் பெருப்பித்தல், நீரோடும் வாய்க்கால்களைத்திருத்துதல் யந்திரவண்டி முகப்பில் மின்சாரதீபம் வைத்தல் முதலானகருமங்கள் நடைபெற்றன. வெள்ளப்பெருக்குக்காலங்களில் அதனை அறிவிப்பதற்கு மின்சாரத்தினுல் இயக்கப்படும்கருவி ஒன்று மதவாச்சிக்கும் மடுவுக்கும் இடையில் வைக்கப்பட்டிருக்கிறதென்பனவாம்.

புகைரதப்பகுதியார் இப்பொழுது அநுசரிக்கும் முறைகளிற் சிற்சில மாற்றங்கள் செய்து பிரயாணிகளுக்குத் தக்க வசதிகள் செய்தல்வேண்டும். அவையாவன:— பிரயாணக் கிரயத்தைச் சிறிதே குறைத்தல்வேண்டும்; "பார்சல்" முதலானவற்றின் மீது விதித்துள்ள கிரயவிகிதத்தையும் குறைத்தல் வேண்டும்; புகைரத ஸ்தானங்களிலுள்ள உத்தியோகத்தரும் கரிய உடைதரித்தோரும் மூன்றும் வகுப்பிற் பிரயாணம் செய்வோரையும் மரியாதையாக நடத்தப்பழகிக்கொள்ளவேண்டும். பெரியோர் என்ற நிரையில் வைத்தெண்ணப் படுவோரும் அநேகர் மூன்றும் வகுப்பிற் பிரயாணம் செய்கிறார்களென்பதைப் புகைரதப்பகுயிற் கடமைபார்க்கும் பெரும்பான்மையானோர் உணர்ந்து கொள்வதில்லை. வேதனம் பெற்றுக்கடமைபார்ப்போரிற் பெரும்பாலார் முதலாம் இரண்டாம் வகுப்புவண்டியிலிருந்துவரும் கட்டளையைச் சிரசின்மேலும் மூன்றும் வகுப்புவண்டியிலிருந்து வரும் சத்தத்தை காலின்கீழும் வைத்து நடப்பதை நாம் பலமுறையும் நேரிற்கண்டிருக்கின்றேம். புகைரதப் பிரயாணத்தைப் பற்றிக் கூறுமிடத்து மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் சில சந்தர்ப்பங்களில் அதிக கேவலமாக நடத்தப்படுகின்றுர்கள். முதலாம் இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளைப்போல மூன்றும் வகுப்புப் பிரயாணிகளும் மலசலம் கழிக்கும் இயல்புடையர் என்பதை இந்தப் புகைரதப்பகுதியார் இன்னமும் அறிந்துகொள்ளவில்லை. அதனையும் இவர்கள் உள்ளபடி அறிந்து மூன்றும் வகுப்புவண்டிகளிலும் மலகூடம் அமைத்தல்வேண்டும். மலசலம் கழிக்க வேண்டி வரும்போது தப்பாதுகழிக்கவேண்டுமென்றி வசதியான இடமும் புகைரதப்பகுதியார் வகுக்கும் நேரமும் வரும் வரையும் அதனைத்தடுத்தல் கூடாதாகும். மேல்வகுப்புகளிற் பிரயாணம் செய்யும் அதிகாரிகளும் ஆலோசனைச்சபையாரும் சட்டநிரூபணசபை அங்கத்தவர்களும் அவர்கள்படும் கஷ்டங்களை இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை. மேலேசொல்லப்பட்ட இக்குறைகளும் பிறவும் நிவிர்த்திசெய்யப்படல்வேண்டும். அங்ஙனம் செய்யப்படாதொழியின் புகைரதவருவாய் குன்றும்; பஸ்வண்டிப் போக்கு, வரவு அதிகரிக்கும் இக்நாளில் சனங்களும் புகைரதமார்க்கமாகப் பிரயாணம் செய்தலைப் புறக்கணிக்கத் தொடங்குவர்.

இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் அநுராசபுரத்துக்கும் மோட்டர்பஸ் போக்குவரவு ஆரம்பித்துப் புகைரதத்துடன் கட்சிகட்டி நிற்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து அநுராசபுரத்துக்குப் புகைரதப்பகுதியார் விதித்துள்ள பிரயாணக் கிரயத்திலும் பார்க்க, பஸ்வண்டிக்காரர் விதித்துள்ள கிரயம் சிறிதே குறைவு. பஸ்வண்டியிற் பிரயாணம் செய்யும் ஒருவரைச்சந்தித்து அவரதுபிரயாணத்தைப் பற்றி விசாரித்தபோது அவர் இப்பிரயாணத்தில் கிரயம் குறைவென்றும், புகைரதத்தில் ஆறு ஏழுமணிநேரம் மலசலவிமோசனமின்றி அதிகஷ்டத்துடன் இடர்ப்படுவதைக் காட்டிலும் பஸ்வண்டியிற் குறைந்த கிரயத்துடன் சென்று வேண்டிய இடத்திற் கஷ்டமின்றி மலசலம் கழித்துப் பிரயாணம் பண்ணுதல் மிகச் சிறந்தது என்று கூறினர். இவற்றை எல்லாம் புகைரதப்பகுதியார் நன்குயோசனைசெய்து கிரயத்தையும் சிறிது குறைத்துப் பிரயாணிகளுக்கு வேண்டிய சௌகரியங்களையும் அமைத்துச் சீர்ப்படுத்தாதொழியின் இங்கும் மோட்டர்பஸ்வண்டிப்போக்குவரவு அதிகப்படும். புகைரதப்பகுதியாருக்கு வருவாயும் குன்றும்.

## குமாரபுரம் சித்திரவேலாயுதர் கோவிற் கும்பாபிஷேகம்.

### 500 வருடத்திற்கு மேற்பட்ட சுப்பிரமணிய ஆலயம்.

இற்றைக்கு ஐஞ்ஞூற்றிற்கு மேற்பட்ட வருடங்களுக்கு முன்னர் இந் நாட்டைப் பரிபாலித்த பரராசசேகர மகாராசாவானர் காஞ்சிபுரத்தினின்றும் தருவிக்கப்பட்ட ஊர் மூத்தயினரென்றும் விக்கினேஸ்வர மூர்த்தியையும் சித்திரவேலர் என்னும் ஆறுமுகசுவாமியையும், முல்லைத்தீவைச் சேர்ந்த முள்ளியவளையிலும் அதற்கணித்தாயுள்ள குமாரபுரம் என்னும் கிராமத்திலும் இரு கோவில்களை அமைப்பித்து முறையே பிரதிஷ்டையுஞ் செய்வித்தார். குமாரபுரம் என்றது குமாரக்கடவுள் கோயில் கொண்டருளிய கிராமம் எனவந்த காரணப் பெயராம். இந்த இரு ஆலயங்களில் நித்திய நைமித்திகங்கள் குறைவற விதிப்படி நடைபெறும்வண்ணம் பரராசசேகர மகாராசா பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கொண்ட வயல் தோட்ட நிலங்களையும் தருமசாதனஞ் செய்திருந்தார். இதனை,

'ஊர்மூத்தயினரைக்கோயில்தனில் உறையவைத்தவகதற்கணித்தாய்ச், சீர்பூத்த குமாரபுரஞ்செந்திவேலரை யுறையச்செய்து நாளும், ஆர்பூத்த பொற்பணங்கள் அறுபத்தொன்றியந்து திருப்பூசைக்கென்று, வார்பூத்தமுலை மடவாருடன அவனே பரராசன் வாழ்ந்தானன்றே"

எனவரும் பழைய சரித்திரச் செய்யுளாலுமறிக. ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முனனே கொடிய பறங்கியர் இவ்வாலயத்திற்குத் தீமை செய்யப்போகின்றுர்களென்பதை முந்தியே யுணர்ந்த மேற்படி கோயிலதிகாரிகள் சித்திரவேலவரையும் தேவிமாரையும் ஆலயத்தினின்றும் அந்தரங்கமாக அகற்றி மறைத்து வைத்தனரென்றும் அச் சித்திரவேற்பெருமானும் தேவிமாருமே வல்லுவெட்டித்துறைக்கணித்தான கந்தவனமெனும் சுப்பிரமணிய க்ஷேத்திரத்தில் நெடுங்காலமாக மூலஸ்தான மூர்த்திகளாகப் பூசிக்கப்பட்டு, பின்னர் பின்னமடைந்தமையினுல் உட்பிராகாரத்தில் வன்னிமரத்தின் கீழ் சிறு ஆலயமமைத்து இப்பொழுது வைத்துப் பூசிக்கப்படுவனவென்றும் ஒரு ஐதிகமுண்டு. அப் புராதன மூர்த்தியை நேரிற் சென்று தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து எழுந்தருளிவந்த சித்திரவேலர் அவாதான் என்று சொல்வதற்குச் சிறிதும் பின்னிற்க மாட்டார்கள். நிற்க,

குமாரபுரச் சித்திரவேலருக்குரிய ஆதனங்களெல்லாம் ஊரவர்களாலும் அரசினராலும் அபகரிக்கப்பட்டன. ஆலயம் பழைய நிலைமையை அடையுங் காலத்தில் அரசினர் அவ்வாதனங்களைக் கோவிலுக்கு மீட்டுக்கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றனராம். ஊரவர்களும் அப்படியே செய்வார்களாம். இற்றைக்கு இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்னர் புத்தூர் பிரமஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் கிலமுற்ற இப்புராதன ஆலயத்தைச் சீர்ப்படுத்த நோக்கங்கொண்டு தமது பொருள் கொண்டும் ஊரவர்கள் உதவிய திரவியங்கொண்டும் ஒருவாறு மேற்படி ஆலயத்தைப் புதுப்பித்துவந்தார். திருப்பணி முற்றுவதற்கு முன் அவர் காலஞ்சென்றனர். இப்பொழுது அவர் குமாரர்களாகிய பிரமஸ்ரீ பரமசாமிக் குருக்கள், பிரமஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் ஆகிய இருவரும் திருப்பணியை ஒருவாறு முற்றுவித்தார்கள். மூலமூர்த்திகளைப் பெறுதற்குப் பொருளின்மையால் வேற்பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் பிரதிஷ்டைக்காகிய சுபமுகூர்த்தமும் நிச்சயித்துக் கொண்டு அதற்குவேண்டிய பொருள்களை வாங்குவதற்கு யாழ்ப்பாணம் வந்தவிடத்தில், இக் கும்பாபிஷேக சமாசாரதை இப்பத்திரிகையில் வெளியிடும்படி தமியேனுக்குச் சொல்லினர். தமியேன சித்திரவேலர் கோயில் கொண்டவிடத்தில் வேற்பிரதிஷ்டை செய்யப் புகின் மூர்த்திபேதஞ் செய்தல் என்னுங் குற்றமுண்டாகுமெனறேன். பிரமஸ்ரீ. பரமசுவாமிக குருக்கள் "பிரதிஷ்டைக்காகிய சகல ஆயத்தங்களும் ஆய்விட்டன, இன்னும் ஒரு வாரந்தானிருக்கிறது, இனி மூலமூர்த்திகளை எப்படிச் செய்வித்தல் முடியும், முற்றுப்பெற்றிருக்கும் மூர்த்திகளை எங்கேனும் வாங்கலாமென்றுற் பொருளுமில்லையேயென று பெரிதுஞ் சஞ்சலமுற்றுர். திருவருட்செயலாற்போலும் கோயிற் பிரமாணத்திற் கமைந்த மூலமூர்த்திகளும் தேவிமாரும் மயூரம் பலிபீடம் என்னுமிவைகளும் நல்லூரில் அகப்பட்டன. ஒரு புண்ணியசீலர் தமபொறுப்பில் மூலமூர்த்திகள் முதலியவற்றை வாங்கிக் கொடுப்பதற்கு உடன்பட்டார்.

நிகழும் குரோதன வருடம் கார்த்திகை மாதம் 11௳ (26-11-25) வியாழக்கிழமை குமாரபுரம் சித்திரவேலாயுத சுவாமிக்குக் கும்பாபிஷேகம் நடைபெறும். அன்பர்களே, இருநூற்றுக்கு மேற்பட்ட வருடங்கட்கு முன்னர் குமாரபுரத்தை விட்டகன்ற எங்கள் சுப்பிரமணியப்பெருமான, பின்னரும் தமது பழைய க்ஷேத்திரத்திற்கு, அங்குள்ள ஆன்மகோடிகளுக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டுமெனத் திருவுளங்கொண்டு எழுந்தருளி வருகின்றுர். இச்சமையத்தைத் தவற விடாதீர்கள். கும்பாபிஷேகச் செலவின்பொருட்டும் திருப்பணிச் செலவின்பொருட்டும் சைவசமயிகளாக இலங்கையிலிருக்கும் ஒவ்வொருவரும் உங்கள் உங்களாலியன்ற பொருளை மேற்படி கோயிற் பூசகர் பிரமஸ்ரீ. கு. பரமசுவாமிக் குருக்களுக்கு அனுப்பி எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யுங்கள்.

## பொருட் பொழிவு.

நாளை (செவ்வாய்க்கிழமை) இரவு ஆறு மணி தொடக்கம் திருநெல்வேலிச் சிவன் கோயில் மண்டபத்திலே ஸ்ரீமத் சுவாமிநாத பண்டிதர் அவர்களால் கந்தபுராணத்திலே சூரபன்மன் வதைப் படலத்தில் சுப்பிரமணியப் பெருமான் கொண்ட விசுவரூப விஷயம் பிரசங்கஞ்செய்யப்படுமென அறியலானேம்,

## இலங்கையில் 10,240 மோட்டர்வண்டிகள்.

இலங்கைத் துறைமுகத் தலைவர் மோட்டர் வண்டிகள் நூற்றுக்கு இருபது விகிதமாக அதிகரித்திருக்கிறதெனச் சென்ற வருட அறிக்கையில் வெளியிடுகின்றனர். இப்பொழுது இலங்கையில் "பெற்ரோல்" என்னும் திராவகத்தால் இயக்கப்படும் வண்டிகளின் மொத்தத் தொகை 10,240.

## ஒரு புகைக்கப்பல் எரிந்தமை.

நியூயோர்க்கிலே ஜாற்ஜன்வில் என்னுமிடத்திற்குப் புறப்பட்ட "விஜுப்" என்னும் புகைக்கப்பல் முழுவதும் நெருப்புப் பற்றி எரிந்தது. அதில் இருநூறு பிரயாணிகள் இருந்தனர். அநேக கப்பல்கள் உதவிசெய்யச் சென்றன. பிரயாணிகள் எல்லோரும் காப்பாற்றப்பட்டனர். அந்த நெருப்பு அற்லான்றிச் சமுத்திரக் கரையிலிருக்கும் நகரங்களுக்குத் தெரிந்ததாம்.

## மோட்டர் வண்டிப் பிரயாணம்.

### சிங்கப்பூரிலிருந்து லண்டனுக்கு.

சார்ல்ஸ் டி சில்வாவும் வேறு மூவரும் சிங்கப்பூரிலிருந்து லண்டனுக்கு மோட்டர்வண்டிமார்க்கமாகப் புறப்பட்டிருக்கின்றனர். அவர்கள் சிலநாட்களுக்கு முன் டெல்கிக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கிருந்து லாகூர், கராச்சி, பலுக்கிஸ்ரான் மார்க்கமாகப் புறப்பட்டு சிரியாவையடைந்தபின் லண்டனுக்குச் செல்வார்கள்.

## விளையாட்டு வினையாய் முடிந்தது.

சென்ற அக்டோபர்மீ 31உ இந்தூர் மகாராசாவின் ஜநநதினக் கொண்டாட்டம் மிக்கஆடம்பரத்தோடுநடைபெற்றது. கொண்டாட்டகாலத்தில் மகாராசாவின் மூத்தகுமாரி தனது தோழியருடன் வாணம் விட்டுக்கொண்டு நிற்கும்போது ஒரு வாணம் இராசகுமாரியின் சேலையிற்பற்றி இராசகுமாரியை முற்றாக எரித்துவிட 10 வயசுவரையிலுள்ள அச்சிறுமி சிறிது நேரத்தால் இறந்தாள்.

## இரணைமடுக் கொலை வழக்கு.

இக்கொலைவழக்கில் பதினோராம் எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஸ்ரீ தா. சிவக்கொழுந்து அவர்களைப் பிணையில் விடவேண்டுமெனப் (18-11-24) பின்னரு கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே சிரேஷ்ட நீதிபதி சேர். ஜோன் பிறுன்ஸ் அவர்கள் முன்பாக மனுச் செய்யப்பட்டது. நீதிபதியவர்கள் இந்த வழக்கு விஷயமாக "அற்றேணி ஜெனறல்" உடைய தீர்மானம் வெளிவருதற்குமுன் தாம் ஏதுஞ் செய்ய விரும்பவில்லையெனக் கூறினர்.

## மகமதிய சுப்பிறீங்கோட்டு நீதிபதி.

இலங்கையில் "சொலிசிஸ்றர் ஜெனறல்" லாகவிருக்கும் கௌரவ மிஸ்ரர் எம். டீ. அக்பார் கே. சி. அவர்கள், சுப்பிறீங் கோட்டுநீதிபதிகளில் ஒருவராகிய மிஸ்ரர் ஹார்வின் அவர்களது சுகவீனங் காரணமாக அவருக்குப் பதிலாகக் கடமைபார்க்கும்படி நியமனம் பெற்று, சென்ற புதன்கிழமை சத்தியஞ்செய்து, நீதிபதித்துவத்தைக் கையேற்றிருக்கின்றனர். இலங்கையிலுள்ள மகமதியரில் இவரே முதலாவதாக இந்த உயர்பதவியைப் பெற்றறவர்.

## பாணந்துறைவாசியின் கோரமான மரணம்.

சென்ற 17உ செவ்வாய்க்கிழமை பாணந்துறையிலே மிஸ்ரர் டபிள்யு. குறுப்பா என்னும் ஒருவர் தமது துப்பாக்கியினுள் "காட்டிறிட்ஜ்" அமைத்துச் சுட்டபோது அது வெடியாமையினால் துப்பாக்கிக் குழலை மடித்துப்பார்த்தார். அதுஉடனே வெடித்து அவரது முகம் முழுவதையும் படுகாயப்படுத்தியது. கோரமான விபத்துக் கிரையான மிஸ்ரர் குறுப்பா வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டுச் சிறிதுவேளையில் இறந்தனர்.

## லெனின் கிரேடில் நம்பிக்கைத்துரோகஞ்செய்த உத்தியோகஸ்தர்.

சில வாரங்களுக்கு முன் றிக்காவுக்குச் சமீபமாயுள்ள லெனின் கிரேடில் நம்பிக்கைத்துரோகஞ் செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நூற்றிருபத்துமூன்று உத்தியோகத்தர் சென்ற வியாழக்கிழமை விசாரணை செய்யப்பட்டனர். அவர்களுள் பன்னிரண்டு பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 30 பேர் விடுதலை பெற்றனர். ஏனையோர் வெவ்வேறு கால வெல்லையுடையசிறைத்தண்டனை விதிக்கப் பெற்றனர்.

## பவ்லாக் கொலை வழக்கு.

### இருவர் தூக்கிக் கொல்லப்பட்டனர்; ஒருவன் பைத்தியகாரனுனன்.

இக்கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பெற்றவர்களில் ஒருவர் இந்தூர் அரசாங்கத்துக்குரிய குதிரைப்படைப் பொலிஸ்காரனாகிய ஷவ்வாமெட் என்பவர் மற்றவர் இந்தூர் விமானப் படைத் தலைவராகிய கப்றின் ஷாம்றோடிக்கி என்பவர். இவர்கள் இருவரும் சென்ற வியாழக்கிழமை காலை தூக்கிக் கொல்லப்பட்டனர். மூன்றாவதாகிய புஸ்பாஸ் ஹில் என்பவன் மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டநாள்தொடக்கம் பைத்தியகாரனாய் வைத்தியசாலையிலிருக்கின்றனன்.

## நகரப் பகுதி ஐரோப்பிய அங்கத்தவர் தெரிவு.

சட்டநிரூபண சபையில் நகரப் பகுதி ஐரோப்பியர்பிரதிநிதியாக மிஸ்ரர் ரீ. எல். வில்லியர்ஸ் அவர்கள் கட்சியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர். இந்திய பிரதிநிதியாகவிருந்து காலஞ்சென்ற மிஸ்ரர் எஸ். ஆர் மகமது சுலுத்தான் அவர்களின் ஸ்தானத்தைப் பெறுவதற்குத் தேசபக்தன் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ. கோ. நடேசையரவர்களும் மிஸ்ரர் எஸ். பி. சார்ல்ஸ் அவர்களும் முற்பட்டுநிற்கின்றனர். இவர்களின் தெரிவு வருகிற டிசெம்பர் மாதம் முற்பகுதியில் நடைபெறும்.

## தோடந்துறைக்கு முதல்முறையாக வந்த பாய்க்கப்பல்.

சென்றபத்துவருடகாலமாகத் தடுக்கப்பட்டிருந்த தோடந்துறை இப்பொழுது திறக்கப்பட்டிருக்கிறது. சென்ற வாரம இருபாய்க்கப்பல் ஒன்று மட்பாண்டங்களும் மங்களூர் ஓடுகளும் ஏற்றிக்கொண்டு தோடந்துறைக்கு வந்து சேர்ந்தது. அங்குள்ள வியாபாரிகளுக்கு வேண்டிய பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து ஏற்றிக்கொண்டு இன்னமும் பல உருக்கள் புறப்பட்டிருக்கின்றனவெனச் சொல்லப்படுகிறது. இங்குள்ள ஊர்காவற்துறை காங்கேயன்துறை வல்வெட்டித்துறை பருத்தித்துறை என்னும் இவற்றுள் ஒன்றையேனும் யாழ்ப்பாண வாசிகளது வசதியின்பொருட்டுத் திறக்கவேண்டுமென நாம் பன்முறை கூறியும் எவரும் சிந்தித்திலர். தோடந்துறை வாசிகள் அதிகாரட்பட்ட சிரமத்தின் பயனாகப்பெற்றுக்கொண்ட சலாக்கியத்தைக் கண்டும் வாளாவிருக்கும் தேசாபிமானிகளும் நமது சனப்பிரதிநிதிகளும் இனியேனும் சிறிது சிந்தித்து நன்மைபுரிவார்களாக.

## தோணிகள் ஆழிவாய்ப்பட்டமை.

### ஏழுபேர் நாலுநாட் கடலிற்கஷ்டப்பட்டனர். அறுவர் கடலில்மூழ்கி இறந்தனர்.

சிலநாட்களுக்குமுன் வங்காளவிரிகுடாவில் உக்கிரமான புயலடித்தபோது ஒரு தோணி ஆழிவாய்ப்பட்டது. அதிலுள்ளோரில் எழுவர் ஒரு பலகையைத் துணையாகக்கொண்டு அதிக கஷ்டத்துடன் நான்கு நாட்களாகக் கடலில் இடர்ப்பட்டனர். அவ்வழியாகச்சென்ற 'சௌடான்' என்னும் புகைக்கப்பல் அவர்களை ஆபத்தினின்றும் மீட்டது. அப்பொழுது அவர்கள் உணர்ச்சியின்றிய நிலையிலிருந்தனர். இரண்டுமணி நேரத்தின்பின் அவர்கள் அறிவு தெளியப்பெற்றுத் தமது வரலாற்றைக் கூறினர். அத்தோணியிற் சென்றோரில் அறுவர் கடலில மூழ்கி இறந்தனர். வேறும் மூன்று தோணிகள் மூழ்கின. அவைகளிற் சென்றோர் கதியைப்பற்றி யாதும் தெரியவில்லை.

## படுகொலை.

### வாய்ச்சண்டை கைச்சண்டையின் முடிவு.

சென்றவாரம் பெய்த அதிகமழை காரணமாகப் பாணந்துறைக்குச் சமீபமாயுள்ள கிராமங்களில் வெள்ளப் பிரவாகம் உண்டாயது. மடமக்குலா என்னும் ஒரு சிறியகிராமத்தைச் சுற்றி அதிகவெள்ளம் இருந்தமையின் அயற்கிராமங்களுக்குச் சொல்வோரை அங்குள்ள சாறிஸ் என்னும் மீன்பிடிகாரன் ஒருவன் தன்னுடைய சிறிய படவில் அக்கரைக்குங்கொண்டுபோய் அதிகபணஞ் சம்பாதித்து வந்தான். சென்ற வாரம் ஒருநாள் ஹங்குலா என்னும் ஒருவன் படகுக்காரனிடம் சென்று தன்னை அக்கரையிற் கொண்டுபோய்விடும்படி கேட்டனன். காத்திராது அகப்பட்ட தொழிலினாற் சிறிதுபணம் சம்பாதித்துக் கருவங்கொண்ட சாறிஸ் என்பவன் அவனுடன் தர்க்கமிட்டான். அத்தர்க்கம் கைச்சண்டையாக மாறியது. ஈற்றில் சாறிஸ் ஹங்குலா என்பவனைப் படுகாயமுறப் புடைத்தான். ஹங்குலா அறிவிழந்து நிலத்தில் வீழ்ந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறிதுவேளையில் இறந்தனன். பொலிசர் எதிரியைப் பிடித்தனர்.

## கப்பல் நிற்கும் ஸ்தானத்தில் தீ விபத்து.

சென்ற புதன்கிழமை நியூ ஓர்வலன்ஸ் என்னுமிடத்திலே மிசிசிப்பிக் கப்பல்நிலயத்தின் ஒருபாகம்எரிந்தது. நேர்ந்த நஷ்டம் 3,000,000 டலரென மதிப்பிடப்படுகின்றது.

## சாதிக் கட்டுப்பாடு.

சில வாரங்களுக்குமுன் சரசாலையிலுள்ள கம்மாளன் ஒருவன அந்தியேஷ்டி ஒன்றுக்கு மேளமடித்து ஊர்கோலம்வருவதற்கு யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிறின்ரெண்டனிடம் அனுமதிப் பத்திரத்துக்காக மனுப்பண்ணினான். பொலிஸ் தலைவர் அவனுடைய மனுவை அங்கீகரியாது தள்ளிவிட்டனர் குறித்த கம்மாளன் அத்துடன் திருப்திப்படாது சாவகச்சேரிப் பொலிஸ் நீதிபதிக்கு மனுப்பண்ணினன். இதனை அறிந்த சரசாலைவாசிகள் ஊர்கோலத்திற்கு அனுமதிப்பத்திரம் கொடுப்பது வழக்கமல்லவென்பதைப் பொலிஸ் நீதிபதிக்குக் கூறும்பொருட்டுச் சென்று கூடினர். நீதிபதி இருபகுதியாருடைய நோக்கத்தையும் கேட்டு ஊரவர்களுடைய சம்மதத்தின்படி செய்ய விரும்பினார். பெரும்பாலார் கம்மாளர் மேளவரிசையுடன் ஊர்வலம் வரின் ஊரில் அதிக மனஸ்தாபமும் கலகமும் நிகழுமென்றும், இதுகாறும் அவ்வழக்கம் அனுசரிக்கப்படவில்லையென்றும் கூறினர்கள். ஒருசிலரே கம்மாளனுக்குச் சார்பாக நின்றனர். ஆகவே நீதிபதி அனுமதிப்பத்திரம் கொடுப்பதற்கு மறுத்தனர். குறித்த கம்மாளன் சுப்பிறீங்கோட்டுக்கு மனுப்பண்ணினன். அம்மனு சிரேஷ்ட நீதிபதியவர்களால் விசாரணை செய்யப்பட்டது. நீதிபதி தேசாசார முறைகளையும் சாதிக் கட்டுப்பாட்டையும் பற்றி விசாரணை செய்து சாவகச்சேரிப் பொலிஸ் கோட்டில் நிகழ்ந்த சமாசாரங்களையும் அறிந்தபின் கம்மாளனுக்காகச் சிறிது பச்சாத்தாபப்பட்டு ஈற்றில் கம்மாளனுடைய மனுவைத் தள்ளிவிட்டனர்

## மத்திய மாகாணச் சைவமகா சபை.

நிகழும் குரோதன ஆண்டு ஐப்பசித்திங்கள் 30-ம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று மாலை 7 மணியளவில் கண்டித் தமிழ மண்டபத்தில் மத்திய மாகாண சைவ மகா சபையின் ஆதரவின்கீழ், நம் சந்தான குரவர்களின் முதல்வராகிய மெய்கண்டதேவரது குருபூசைத்தினங் கொண்டாடப்பட்டது. கண்டிப் பிள்ளையார் கோவில் அர்ச்சகராகிய உயர்திரு கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் மிகவும் அன்புடன் பூசை நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் சமுகமளித்து மெய்கண்டதேவன் திருவடித்தாமரைகளை மனமுவந்து வழுத்தா நின்றனர். மெய்கண்டதேவரது சரலாறு இணைச் செயலாளர்களுள் ஒருவராகிய திரு. செ. சின்னத்தம்பி அவர்களால் வாசிக்கப்பட்டது. அத்தருணம் அவண் குழுமியிருந்த அன்பர் பலரும், அளப்பரிய அருள் வள்ளலாகிய மெய்கண்டதேவனைப் பெற்ற நம் தமிழ் நாட்டின் பெருமையையும், அன்னவரை முன்னோராய்க்கொண்ட தமிழ் மக்களாகிய எமது தவப்பயனின் மேன்மையையும், சிவபெருமான் முதல் பரஞ்சோதி முனிவர் ஈறாக உபதேசித்தருளிய சிவஞானபோதம் என்னும் சொல்லிறந்த விழுமிய பொருளை உலகமுய்யவான் உரைத்தற்குக் கருவியாக மெய்கண்ட தேவர் எடுத்துக்கொண்ட நம் அமிழ்தினுமினிய செந்தமிழின் ஒப்புயர்வற்ற தெய்வீகத்தன்மையையும் நினைந்து நினைந்து களிபேருவகையும் மகிழ்ச்சியும் எய்தினர். பின்பு 9-மணியளவில் தேவாரபாராயணத்துடன் கொண்டாட்டம் முடிவெய்தியது.

மெய்கண்டதேவன் திருவருள்மலிக! கடிக.

## அலெக்ஸான்டிறு மகாராணி தேகவியோகமாயினர்.

நமது அரசசக்கரவர்த்தி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் அன்னையாரும், ஏழாம் எட்வேட் அரசரின் பாரியாருமாகிய அலெக்ஸான்டிறுமகாராணியார் தம்மைப் பீடித்த சுவாதநோய் காரணமாகச் சந்திரஹாம் என்னும் மாளிகையில், தமது குமாரராகிய அரசசக்கரவர்த்தி மேரிமகாராணியார், தமது புத்திரிகள் சுற்ற மித்திரர் சகலரும் சூழ்ந்து பக்கத்தேயிருப்ப, சென்ற வெள்ளிக்கிழமை (20-11-25) மாலை 6 மணி 10 நிமிஷம் வரையில் இவ்வுலகவாழ்வை யொருவினர் இறக்கும்போது இவருக்கு வயது 81. வருகிற டிசெம்பர்மீ முதலாந்உ மகாராணியாரின் 81 ம் வருடக்கொண்டாட்டம் நடக்கவேண்டிய தினமாம்.

அலெக்ஸான்டிறு மகாராணியார் டென்மார்க் தேசத்தின் அரசராகவிருந்த ஒன்பதாம் கிறிஸ்ரயன் மன்னனுடைய சிரேஷ்ட புத்திரி. 1844 ஆண்டு டிசெம்பர்மீ இவர் பிறந்தவர். இவர் கன்னிகையாக விருந்தகாலத்திலே இவரது பேரழகு உலகப்பிரசித்தியானது ஏழாம் எட்வேட்மன்னர் தமது நண்பரொருவருடைய இல்லத்தில் இவருடையபிரதிமைப்படத்தைக்கண்டமாத்திரத்தே இவரது பேரழகைக்கண்டு இவர்மீது காதல்கொண்டனரெனச் சொல்லப்படுகின்றது. அக்காலத்தில் இளவரசராகவிருந்த எட்வேட் சக்கரவர்த்தி அலெக்ஸான்டிறு மகாராணியை ஜர்மனியில் முதன்முதற் சந்தித்தனர் சந்தித்த சமையத்தில் இருவரும் ஒரு பரஸ்பரம் காதல் கொண்டனர் 1862ஆ செப்டெம்பர்மீ 9உ இருவருக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட்டது. 1863ஆ செப்டெம்பர்மீ 10உ இவர்களுடைய விவாகம் அரச குடும்பத்திற்குரிய சகல ஆடம்பரங்களோடும் நடைபெற்றது

1901ஆ விக்டோறிய சக்கரவர்த்தினியார் இறந்தவுடன் எட்வேட் இராசகுமாரர் பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் தலைவரானர். 1902ஆ ஆகஸ்ட்மீ 9உ எட்வேட் சக்கரவர்த்திக்குப் பட்டாபிஷேகம் நடந்தபோது அலெக்ஸான்டிறு மகாராணியும் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றனர். விக்ரோறிய சக்கரவர்த்தினி இறந்தபின்னர் சனங்கள் அவர்மீது அதுகாறும் பாராட்டிவந்த அத்துணை ஆர்வத்தை அவருடையமருகியாகியஇவர்மீதும் மரணபரியந்தம் பாராட்டிவந்தனர்.

இவரிடத்தில் இருகுமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தனர் மூத்த இராசகுமாரர் 1892ஆ ஜனவரிமீ அகாலமரணமடைந்தனர். மகனுடைய மரணம் அலெக்ஸான்டிறு மகாராணிக்கும் மகாராசாவுக்கும் பெரும் மனத்துயரை ஆக்கிவிட்டது நமது அரசசக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜோர்ஜ மன்னரே இவருடைய இரண்டாம் புத்திரர்.

அலெக்ஸான்டிறு மகாராணி தமது நாயகராகிய எட்வேர்ட்மன்னர் 1910 ஆண்டு மேமீ இறந்து விட மிக்கதுயரோடு கூடியவராய் தமது ஆடம்பர வாழ்க்கையையெல்லாம் மருகியாகிய மேரிமகாராணியிடம் முறையே ஒப்புவித்துவிட்டு சனங்களுக்கு அவர்களுள்ளும் விசேஷமாகப் பெண்பாலருக்குப் பேருதவிகள் செய்துகொண்டு காலங்கழித்து வந்தனர் விக்டோறியாப் பெருமாட்டியும் தமது மருகியாகிய இவர்மீது மிக்க அன்புபாராட்டிவந்தாரெனக் கூறப்படுகின்றது கட்டழகு ஒழுக்கம் நற்குணம் இனியவார்த்தை முதலாம் சுகுணங்களோடு கூடிய இம்மகாராணியார் ஐரோப்பாக்கண்டத்துள்ள சிறந்த பெண்களுள் ஒருவராக வைத்து மதிக்கப்படும் இயல்புவாய்ந்துள்ளவர். இவருடைய தேகவியோகத்தைப் பற்றிக் கேள்வியுற்றமாத்திரத்தே துயருறா ஆண்கள் பெண்கள் எவருமிலராம்.

"தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

☞ "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது.
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
(H. 40) S. இந்தியா.

## குருகுல வித்தியாலயம்.

(காரைநகர் சைவமகாசபைக்கூட்டத்தில் தேசீயவகுப்பு மாணவர் ஒருவரால் வாசிக்கப்பெற்றது.)

உலக வியலுக் குரியபல கலையினறிவு முழுவுமுதல், அலகி றெழில் களவைமுழு மினிது புரியு மறிவுசீலன், இலகு மரிய விருநிதியு மரசுரிமை யெனுமதவு, மலமினெறிகளை மனமுணர்வு மருள்ககருணை மலிகுருவே.

குருகுல வித்தியாலயம் என்பது ஆசிரியரது ஆச்சிரமத்தில் அமைந்த கலாசாலையெனப் பொருள்படும். பாரமார்த்திக வியாவகாரிக ஞானங்களிற்சிறந்த ரிஷிசிரேஷ்டர்கள்வதியும் பர்ணசாலைகளாகிய ஆச்சிரமங்களிலேயே பண்டைக்காலத்தில் பிரமசாரிகள் யாவரும் கல்வி கற்றும், நன்னெறியிற் பயின்றும் வந்தனர். மக்கள் யாவரும் பெரும்பாலும் அடையவேண்டிய பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நால்வகை நிலையுள் பிரமசரியம் என்னும் முதல் நிலையிற் பயிலுங்காலம் முடியுந்தனையும், யாவரும் குருகுலத்திலேயே தங்கியிருப்பர். அரச குமாரராயினும் மற்றெவராயினும் குருகுலவாசஞ் செய்யாதிருத்தல் முடியாது. யாவரும் குருகுலத்தில் வசித்துத் தத்தமக்குவேண்டிய கலைகளைக் கற்றும், தொழில்களைப் பயின்றும், நல்லெண்ணம் நல்வார்த்தை நற்செய்கைகளை மேற்கொண்டும் விளங்குவர்.

அங்ஙனம் குருகுலவாசஞ் செய்யும் பிரமசாரிகள்யாவரும் "எத்திறத்தாசான் உவக்கும் அத்திறம் அறத்திற்றிரியாபபடர்ச்சி வழிபாடே" என்றுங்கு அறத்திற்றிரியாத ஆசிரிய வழிபாட்டினராயும், அவரது சுபாசுபங்களிற் கலப்புடையராயும், அவராற் கொடுக்கப்படு முணவைக் கொள்பவராயும், ஜீவிப்பர் பண்டைக்காலத்திலும் வருணாச்சிரமநெறிகள் இல்லாமையில்லை. மிகக்கிரமமாக இருந்துவந்தன. ஆனால் தற்காலத்திற்போல ஒருவருணத்தாரை, மற்றொரு வருணத்தார் நசிக்கும் துவேஷபுத்தியுடன் அவ்வருணாச்சிரம தருமங்கள் அமைந்திருக்கவில்லை. வருணங்கள் தோறும் பரஸ்பரம் காருண்ய சித்தவிருத்தியமைந்தது. அதனால் உலகினர்யாவரும், உடம்பினுறுப்புக்கள்யாவுந் தத்தந்தொழிலைச்செய்ய அவ்வுடம்பு செவ்விதின் வாழுமாறுபோல, ஒற்றுமையுடன் தத்தந்தொழிலைச்செய்து உன்னதஜீவியத்தை யெய்தியிருந்தனர். நமது தேசமே பூர்வத்தில் ஜனத்தோற்றத்துக்கும், சமய உணர்ச்சிக்கும், சிறந்த நாகரீகத்துக்கும், எவ்வித கலாஞானங்களுக்கும், எவ்வித தொழிற்பயிற்சிகளுக்கும் எவ்வித செல்வங்களுக்கும்தாயகமாயிருந்தது. நமது தேசத்துக் குருகுலங்களிலே கற்றுத்தேறிய மாணவர்களே மகாரிஷிகளாயும், மகாகவிகளாயும், மகாசக்கிரவர்த்திகளாயும் மகாராஜாக்களாயும், யோகேஸ்வரர்களாயும், மகாப்பிரபுக்களாயும், பெருங்கொடைவள்ளல்களாயும், மகாஞானிகளாயும், விளங்கினர்.

நாங்களும் நமது பூர்வீகபரதகண்டத்தார் போன்று உன்னதநிலையை அடையவேண்டுமானால், நம்மக்களெல்லாம் சிறு பிராயத்திலேயே ஒற்றுமையுணர்வையும், சமய அறிவையும், சுவபாஷாஞானத்தையும், கமத்தொழிற் பயிற்சிகளையும், அரசியல் வியவகாரங்களையும், மற்றுங் கலாஞானங்களையும் பெறத்தக்கதொரு குருகுலவித்தியாலயம் எங்கள் நாட்டிற்கு அத்தியாவசியம் வேண்டப்படுவதாகும். அங்ஙனம் அமைக்கப்படும் குருகுலமானது நகருக்குப் புறத்தே வாசயோக்கியமான ஒரு தனியிடத்திலமைக்கப்படுதல்வேண்டும். அங்கே பூர்வீக

கல்விமுறையைத் தற்கால உலகப் போக்குக் கேற்றவகையிற் சீர்செய்து மாணவர்களுக்குச் சத்தியம், தருமம், அன்பு, அருள், ஆற்றல், போற்றல், அறிவு, ஆராய்வு முதலிய உயர் குணங்கள்யாவும் வெகு சுலபத்திற் கைகூடத் தக்கதாகப் பயிற்றுதல்வேண்டும். குருகுலத்தின் மத்தியில் சாந்தமயமான ஒரு தேவாலயமும், குருபீடமும் இருததல்வேண்டும்.

அங்கேமாணவர்களுக்குத் தமிழும் சமஸ்கிருதமும் அரசபாஷையும், கணித விஞ்ஞான சரித்திர பூகோள ககோள பூதபௌதிக ரசாயன தருக்க சாஸ்திரங்களும் அரசியல் நூல்களும் கற்பிக்கப்படல் வேண்டும். வியநியாகக் கமத்தொழிலும் நெசவு முதலிய கைத்தொழில்களும் பயிற்றப்படுதல்வேண்டும் அக் குருகுலமே காலக்கிரமத்தில் ஒரு தேசிய சர்வகலாசாலையாகத் தகுந்த முறையில் நடத்தப்படுதல் வேண்டும். அங்கே மேற்கூறப்பெற்ற லௌகிகக் கல்விகளைக் கற்றுத்தேறி வெளியேறும் ஒவ்வொரு மாணவரும் தங்கள் இஷ்டம் போலச் சுதந்தரத்துடனும் சொந்தத்தொழிலுடனும் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு ஜீவிக்கக்கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.

நைஷ்டிகப் பிரமசாரியாயிருந்து தத்துவஞான சாஸ்திரங்களைப் பயிலவிரும்பும் மாணவர்களுக்கும் அவற்றைக் கற்றுக்கொள்ளக் கூடியவசதிகளெல்லாம் அமைத்திருக்கவேண்டும். அக் குருகுலத்தின் வளர்ச்சிக்காக ஒரு பெருந்தொகைப்பணத்தை மூலதனமாகக் கட்டுதல்வேண்டும் அதனைத் தேசங்கள்தோறுஞ் சென்று யாசித்துத் தரும நன்கொடையாகப் பெறுதல்வேண்டும். குருகுலத்தில் ஆரியதிராவிட வேதாகமநெறியோடுபட்ட எவ்வகை மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப் படுதல் வேண்டும். எம்மாணவரும் தத்தம் வருண ஆச்சிரம தருமத்திற்குத்தக அடையவேண்டிய உன்னதநிலைகளையெல்லாம் அடையும்படி செய்தல்வேண்டும். உண்மையில் வேதனங்கொடுக்கமாட்டாத, சிறந்த அறிவுக்கூர்மையுடைய மாணவர்களையும் குருகுலத்திற்சேர்த்துச் சகல போஷணைகளுஞ்செய்து கல்விகற்பிக்கத்தக்க ஒழுங்குகளும செய்திருத்தல்வேண்டும்.

தியாக சிந்தையும் சாந்தகுணமும் கல்வித்திறமையும் கற்பிக்குந்திறமையும் சதாசாரமும் வேதாகமவழிவந்த ஆஸ்திகமதமும், உலகியலறிவும் அமைந்த ஆசிரியர்களை அமைத்தல் வேண்டும். அவர்கள் மாணவர்களது கல்வித்தேர்ச்சியில் மாத்திரமன்றி, அவர்களது சதாசாரத்திலும், ஆத்ம ஈடேற்றத்திலும் கருத்துள்ளவர்களாயிருத்தல்வேண்டும். மாணவர்கள் சுயநம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் தம்பால் ஒருவித !தவறுமின்றி அச்சமற்றவர்களாய் ஜீவித்தல்வேண்டும். அவர்கள் எப்பொழுதும் ஆசிரியர்களுடன் கூடி நற்குண நற்செய்கைகளைப் பழகிவரத்தக்க ஒழுங்குகள் செய்தல்வேண்டும். படுக்கையிலும் மற்றெப்போதும் மாணவர்களது மேற்பார்வை ஆசிரியர்வசமேயிருத்தல்வேண்டும். மாணவர்கட்கு அதிகாலையிலும் பிற்பகலிலும் அற்பமெல்லிய உணவும், பகல் பதினொருமணியளவிலும் இரவு ஏழுமணியளவிலும் முக்கியபூரண உணவும் கொடுக்கப்படுதல் வேண்டும். மற்சமாமிச உணவுகளைமுற்றுய்நீக்கி, அரிசி பருப்பு காய்கனி பால் தயிர் நெய் முதலியவற்றையே சேர்த்துக்கொள்ளல் வேண்டும். குருகுலத்துக் கென்றே பரிசுத்தமான ஒரு பசுமடம் அமைத்துக்கொண்டால், கோசம்ரக்ஷணவிரதம் அனுஷ்டிக்கப்பயில்வதுமாகும்: சுத்தமான பால் தயிர் நெய்களைப்பெறுவதுமாகும்.

பெற்றார்களோ, காப்பாளர்களோ, தமது பிள்ளைகள் ஜாதிக்கட்டுப்பாட்டை உத்தேசித்து எல்லாரோடுங் கலந்துண்ணக்கூடாதெனத் தெரிவித்தால், அவ்விதமாணவர்கள் தனியேயிருந்துண்ண அநுமதிசெய்தல் வேண்டும். ஆனால் எந்தமாணவரேனும் பெற்றாரும் தமது மனச்சாட்சிக்கொப்ப, தம்முடன் சமபந்தியிலுண்ணவிரும்பும் எந்தமாணவர்களுடனும் சமபந்தி போசனஞ் செய்யவிரும்பினால் அந்த மாணவனைத்தடுத்தல் கூடாது. அதிக பணந்தருவதாயினும் எம்மாணவருக்கும் (எல்லாருக்கும்கொடுக்கப்படுமுணவேயன்றி) விசேஷ உணவு கொடுத்தல் கூடாது. அரசன்வீட்டுப் பிள்ளையும் ஆண்டிவீட்டுப்பிள்ளையும் ஒரே அந்தஸ்திலேயே கவனிக்கப்படுதல்வேண்டும். ஆகாரம் முதலிய போஷணைகளில் ஒருபோதும் பேதங்கூடாது.

குருகுலத்தில் கல்விபயிலவரும் சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்குப்போலவே சகலவசதிகளும் பிரத்தியேகமாக அமைத்துக்கொடுத்தல் வேண்டும். அப்பகுதியிற் றொழிற்படும் ஆசிரியர் முதலியோர் மிகுதியும் பெண்களாயிருத்தல்வேண்டும் சிறுமிகளுக்கு விசேஷமாக நூல் நூற்றலும் சங்கீதமும் சமையல்செய்தலும், கற்பியலும் கற்பித்தல்வேண்டும்.

குருகுலத்திற்கென அமைந்தவைத்தியர் அடிக்கடி மாணவர்களது தேகாரோக்கிய நிலையைக்கவனித்தல்வேண்டும். சாமானிய நோயுற்ற மாணவர்களுக்கு ஆகார நியமத்திலேயே அதற்கேற்ற சிகிச்சையைச் செய்யலாம். விசேஷமாய் ஔஷதசிகிச்சையும் செய்யவேண்டிய நோயுற்றவர்களை குருகுல வைத்தியசாலையில் வைத்துப் பரிகரித்தல் வேண்டும், குருகுலத்தில் பாவிக்கப்படும் பொருள்களெல்லாம கிடைக்கத்தக்கவரையில் சுதேசியப்பொருள்களாகவேயிருத்தல் வேண்டும்

இவ்வித குருகுலத்தை நடத்தும் பொறுப்பமைந்த முதன்மையான அதிகாரம் ஒரு திருவாகசபை மூலமாக நைஷ்டிகப் பிரமசரியநெறிநிற்கும் வழுவாத ஒரு ஆசிரியரிடங்கொடுக்கப்படுதல்வேண்டும். அந்நனமாய ஆசிரியர்கிடையாதபோது சுயநலங்கருதாத தேசத்தொண்டினையே மேற்கொண்ட ஒருகிருகஸ்த ஆசிரியரிடமுங் கொடுக்கப்படலாம. இவையே குருகுலவித்தியாலயவிஷயமாக யான் வெளியிடத்தக்கனவாம். "குணை நாடிக் குற்றமு நாடி அவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்," சுபம்.

சுழுத.

## ராட்டினத்தால் ஆவது மற்றென்றால் ஆகாது.

### ஓர் அமெரிக்கரின் அபிப்பிராயம்.

(முற்றொடர்.)

ராட்டினத்தால் அடக்கம் உண்டாகிறதென்று சொன்னேன். அடக்கம் என்றால் பெருமை அல்லது அஹங்காரம் இல்லாமலிருத்தல்; கையால் வேலை செய்து பிழைப்பவர்கள் அடக்கமாகத்தான் இருப்பர். எல்லோரும் அவரவர் வீட்டில் சிறு தொழில் நடத்துவதென்று வந்தால் எல்லோரும் சாமான்யாகிவிடுவார்கள்; அடக்கம் தானுகவே வந்துவிடும் ஒருவன் மட்டும் நூற்று முப்பது கோடிப் பேரையும் காப்பாற்றிவிடப் போவதில்லை. ஒவ்வொருவனும் சமமான தொண்டு புரிகிறான். அதிகமாகப் பேசுவதாலும் எழுதுவதனாலும் ஒருவிதமான அந்தஸ்தும் செல்வாக்கும் ஏற்பட்டுவிட்டதாக ஒருவன் நினைத்துக் கொள்ளலாம்; ஆனால் ராட்டினத்தைக் கையாளுவதன் மூலமாக ஒரு சிறிய வேலையைச் செய்தாலும் அது மட்டமன்று. பலபேர் சேர்ந்து போடும் கூச்சலை விட ராட்டினத்தில் நூற்கிற நூல் ஸ்திரமானது; நீடித்திருக்கக்கூடியது. பல சிறு பிராணிகள் சேர்ந்தால்தான் முத்தும் பவழமும் உண்டாகிறது. முத்துக் கிடைக்க ஆரம்பித்தால், ஸ்தலத்துக்கு மஹிமை யேற்பட்டுவிடுகிறது; அழகும் சுபிட்சமும் நிறைந்த பிரதேசமாகி விடுகிறது. எனவே ஒவ்வொருவரும் ஜன சமூகத்திற்கு முக்கியமென்று ஏற்பட்டால், அடக்கம் கட்டாயம் உண்டாகிவிடும்.

கதர் உடுப்பது ஆடம்பரமற்ற வாழ்வுக்கு ஒரு சாதனமாகும். ராட்டினம் தற்கால நாகரீகத்தைப்போல சிக்கலானதன்று. அது சுலபமான இயந்திரம் சுலபமாகப் பழுது பார்க்கக் கூடியது. அதிலிருந்து உற்பத்தியாகும் துணியும் சாமான்யமானது. அதை உடுத்துகிறவருக்கு ஆடம்பரம் எங்கிருந்து வரும்? நமது கையால் நூற்று நாமே தயார் செய்யும் துணி நமக்குப் பரிசுத்தமாகவே படும். தரித்திரத்தினுலோ அன்றி அழகு இன்னதென்று தெரியாமலோ சிலர் நேர்த்தியான உடை தரிக்காமலிருக்கிறார்கள்; ஆனால் கதர் உடை தரிப்பது அம் மாதிரியல்ல. நமது சக்தியையும் பலத்தையும் அறிந்து, நமக்குப் பரிசுத்தமாகப் படுகிற துணியை உடுத்துகிறோம். பிறர் செய்யும் துணிகளில் நேர்த்தியிருப்பதாக கதர் தரிப்பவரின் கண்ணுக்குப்படாது. வாழ்வுக்கு அனுவசியமான துணிகள் விலங்குக்குச் சமானமாக அவர்களுக்குப் படும். அவர்கள் ஆசைகளை வெறுப்பார்கள். மற்றவர்களை அண்டிப் பிழைக்கலாமென்று புத்தி அடியோடு போய்விடும். மற்றவர்கள் நம்மைச் சுரண்டமுடியாது என்ற திருப்தி மற்றொரு புறத்தில் உண்டாகும். கதர் அன்பின் அறிகுறியாகையால் அது கண்ணுக்குப் பரிசுத்தமாகப்படும்.

தன்னடக்கம் இல்லாமல் பல நாகரீகங்கள் பாழாயிருக்கின்றன, மேனாட்டார் இந்தியாவுக்கு வந்தபோது பல விநோதப் பொருள்களைக் காட்டி, ஆசையுண்டுபண்ணி, இந்தியரை வியாபாரத்துக்கு அழைத்தார்கள், அந்த ஆசை இந்தியாவில் பெருகப்பெருக அதுவே இந்தியாவுக்கு விலங்காகமுடிந்தது. மேனாட்டு முறையில் குக்கிராம ஜனங்கள்கூட வாழ ஆரம்பித்துவிட்டதாகவும், இந்தியாவின் தரித்திரம் அநேக மடங்கு அதிகரித்துவிட்டதென்றும் ஸ்ரீமான் ஆண்டிரூஸ் எழுதியுள்ள ஒரு புத்தகத்திலிருந்து தெரிகிறது. கதர் திட்டத்தை நிறைவேற்றினால் தேவை குறையும், ஆசை ஒழியும், தன்னடக்கம் உண்டாகும்; அன்னிய நாட்டு வியாபாரிகளும் முதலாளிகளும் ஆதிக்கம் வகிக்கமுடியாது.

ஒருவனுடைய மொத்தச் செலவில் 6-ல் 1 பங்கு முதல் 3-ல் 1 பங்கு வரையில், துணிகளுக்குச் செலவாகிறது. குடும்பத்துக்கு வேண்டிய துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டால் அது பெரிய லாபமாயிருக்கும். செல்வநிலை விருத்தியாகி சுய நம்பிக்கை ஏற்பட்டால், ராஜீயத் துறையிலும் ஒரு புதிய உணர்ச்சியேற்படும். தைரியமாக வேலை செய்யலாம். எல்லாவற்றிற்கும் முதலில் மனமாறுதல் ஏற்பட்டாக வேண்டும் கொஞ்சம் மனமாறுதல் ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து வந்தால் போகப்போக தைரியம் உண்டாகிவிடும். சுய நம்பிக்கையும் தைரியமும் ஸ்வாதீன உணர்ச்சியும் ஏற்பட்டால், தனக்குரிய அந்தஸ்தை இந்தியா பெற அதிககாலமாகாது.

செல்வ நிலைத் துறையில் பிறருடைய சம்பந்தம் இல்லாதிருப்பதுதான் நல்லதென்பதை சில சாஸ்திரிகள் ஒப்புக்கொள்வதில்லை தேவைக்கதிகமாக ஒருவனுடைய கையில் மிஞ்சுவதுதான் செல்வம் எனப்படும்; தனக்குவேண்டியதை இந்தியா தயாரித்துக்கொண்டு, பாக்கியை மற்ற நாடுகளுக்கனுப்படும். அப்படிச் செய்யாமல் இந்தியப் பருத்தியையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு கோடிக்கணக்கான இந்தியர்கள் வேலையின்றி அவஸ்தைப்படுவதும் விலைகொடுத்து சீமைத் துணிவாங்குவதும் மிகக் கேவலமாகும். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யை விலைக்குவாங்குவதுண்டா?

வைத்தியம் உள்ளவிடத்தில் விடுதலை நிச்சயம் விடுதலைக்கு வழிகாட்டுவது ராட்டினம். ஆகையால் ராட்டினத்தில் ஸத்தியம் அடங்கியிருக்கிறது; கதரில் அழகு இருக்கின்றது, அழகில்லையென்று சொல்வோர் அனுபவத்தில் என்னுடைய அபிப்பிராயத்தின் உண்மையை ஒப்புக்கொள்வார்கள். சிலருக்கு மேனாட்டு வஸ்திரங்கள்தான் அழகாகப்படும்; ஆனால் மேனாட்டாரில் சிலர் அந்த அழகைக்கண்டு வெறுப்படைந்து மாட்டுத்துணிகளையும், கம்பளங்களையும் விரும்புகிறார்கள் இந்தியாவின் கதர் முன்னொரு காலத்தில் ஜாப் பிரக்கியாதி அடைந்திருக்கவில்லையா?

கதர் ஒற்றுமையையும், பலத்தையும் உண்டு பண்ணுகின்றது. இந்தியாவுக்கு முக்கியமாக வேண்டுவது ஒற்றுமையும் பலமுந்தான்.

—சுதேசமித்திரன்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 7-ம் நம்பர் சின்னக் கடைத்தெரு பெ. தம்புஎன்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ.

| நம். | மீ | உ | ரூ. சத. | நகை விபரம். |
|---|---|---|---|---|
| 13 | 2 | 10 | 10 | கொப்புசிமிக்கிகூட்டம் 1 |
| 17 | 2 | 14 | 24 | கைச்சங்கிலி 1 |
| 28 | 2 | 20 | 30 | வெ. பாதசரம் கூட்டம்1 |
| 43 | 2 | 28 | 6 | ஆளைவில்உட்கட்டு 1 |
| 93 | 3 | 29 | 15 | கல்கொப்புசிமிக்கி கூட்டம் 1 வெ. ஒட்டியாணம் 1 |
| 95 | 4 | 7 | 10 | இமிற். கல்மோதிரம் 1 |
| 118 | 4 | 27 | 10 | கம்பியுடன் கல்தோடு கூட்டம் 1 |
| 122 | 4 | 30 | 11 | தோட்டுச்சிமிக்கி கூட்டம் 1 |
| 129 | 5 | 10 | 40 | பத கல்லட்டியல் 1 |
| 134 | 5 | 13 | 12 50 | 3நூல் அட்டியல் 1 |
| 137 | 5 | 15 | 10 | குவளைக்கடுக்கன் கூட்டம் 1 ஒரு சுரை இல்லை |
| 163 | 5 | 29 | 18 04 | அறைக்காப்பு ஒற்றை முறிவு |
| 180 | 6 | 15 | 120 | 5பட்டுமணி1 4நூல் உட்கட்டு 1 கொத்துபொன் காப்பு கூட்டம் 1 வெ. பாதசரம் கூட்டம் 1 |
| 188 | 6 | 19 | 17 | சிகப்புக்கல்வைத்த தோடு கூட்டம் 1 |
| 192 | 6 | 20 | 14 | முழுத்தங்கப்பவுண் 1 |
| 197 | 6 | 21 | 30 | பதக்கமுடன் கரிசமணிக் கோர்வை 1 |
| 202 | 6 | 24 | 14 | கடுக்கன் குவளையும் முத்தும் கூட்டம் 1 |
| 206 | 6 | 26 | 55 | பட்டணக்காப்பு சோடிI |
| 215 | 7 | 1 | 14 | மயிர்மாட்டி கூட்டம் 1 |
| 240 | 7 | 9 | 13 | கரிசமணிக் கோர்வை 1 |
| | | | | பின்கோர்க்கி பழுது |
| 269 | 7 | 21 | 55 | 5பட்டு மணிக்கோர்வை1 |
| 308 | 8 | 6 | 8 | கம்பிசுரையுடன் தோடு கூட்டம் 1 |
| 311 | 8 | 8 | 16 | சிகப்புக்கல் பிஞ்சுக்கடுக்கன் சோடி 1 |
| 352 | 9 | 2 | 25 | இமிற் சிகப்புக்கல் ஒப்பின் தோடு கூட்டம் 1 |
| 356 | 9 | 4 | 70 | முகப்புடன் 5பட்டிலை மாலை 1 |
| 358 | 9 | 6 | 45 | பட்டணக்காப்பு கூட்டம் 1 |
| 361 | 9 | 14 | 100 | பின்கோர்க்கியுடன் 5பட்டிலைமாலை 1 |
| 390 | 10 | 10 | 20 | பொன் சறடு 1 |
| 405 | 10 | 20 | 30 | பின்கோர்க்கியுடன் 5பட்டு கடுகுமணிக் கோர்வை 1 |
| 414 | 10 | 26 | 20 | பவுண்பெட்டிமோதிரம்1 |
| 453 | 11 | 18 | 6 | பவுண் திருகு 1 |
| 472 | 11 | 22 | 8 | பொன் பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 496 | 11 | 29 | 15 | முழுத் தங்கப்பவுண் 1 |

விற்பனவு:—குரோதனஞு கார்த்திகைமீ 24உ (9-12-25) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்டநகைபிறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
வெண்டிஸ்மேஸ்தர்,

(Mis 754) 20-11-25.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-கிழக்கு மெ. லெ. மெ. நல்லசிவம்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| ஈட். இல. | தி. | ரூ. | நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 1924ஆ. செப்டெம்பர். | | | |
| 370 | 12 | 20 | பறங்கித்தெரு [illegible] பொன் [illegible] ஒன்று |
| 433 | 1 | 45 | [illegible] பொன் கைச்சங்கிலி சோடி 1 |
| 436 | 1 | 25 | [illegible] பொன் காதுமணி சோடி 1 |
| 437 | 6 | 50 | [illegible] பொன்சங்கிலி அட்டியல் 1 |
| 446 | 15 | 45 | [illegible] பொன் [illegible] சோடி 1 |
| அக்டோபர். | | | |
| 465 | 8 | 30 | [illegible] பொன்கொ[illegible] 1 |
| 470 | 20 | 50 | [illegible] 1 |
| 471 | 21 | 120 | [illegible] 1 |
| 472 | 22 | 50 | [illegible] 2 கொப்பு |
| நவம்பர். | | | |
| 475 | 2 | 60 | [illegible] சோடி 1 |
| 479 | 14 | 10 | [illegible] மோதிரம் 1 |
| 480 | 15 | 37 | [illegible] பக்கம். |

விற்பனவு:—குரோதனஞு கார்த்திகைமீ 13உ (28-11-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு செல்லையா உடையார்,
வெண்டிஸ்மேஸ்தர்.

(Mis. 753.)


## புதிய திணுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற் கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னூடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய திணுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் திணுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
(Y. 39) COLOMBO.

## மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனால் அது சேர்த்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினால் தைலம் செய்வது சுலபமே. விலையும் சரசமாகும்.—ஆனால் அது பொதுஜனங்கள்மனதிற்கு ஒப்பாது.

### லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் இந்தத் துர்நாற்றமுடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினாலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்ததிருக்கிறது.

5—L—25.




(Y. 41. c.)


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.